# கொழும்பு பல்கலையின் சுதேச மருத்துவ மாணவர்

## உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு) கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசமருத்துவபீடமாண வர்கள் நடத்திவரும்சத்தியாக் கிரக நடவடிக்கை உண்ணா விரத போராட்டமாக மாறியுள்ளது.

தாம் விடுத்த கோரிக்கைகளை அரசாங்கமும் பல்கலைக் கழக நிர்வாகமும் இதுவரை செவிமடுக்காததையடுத்தே மேற்படி மாணவர்கள் நேற்று முதல் உண்ணாவிரதப்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 10 இதழ் 36

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23 — 03 — 1993

மட்டு. மாவட்டத்தில்

## மாணவர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மாவட்டத்தில் கித்துள் பாடசாலை மாண வர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை அண்மையில் நடத்தினர்.

தமது பாடசாலையில் கல்வி கற்பதற்கு போதிய வசதிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

# கடற்படையை நவீனமயமாக்க அரசுக்கு அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா கடற்படைக்கு புதிய ரக நவீன ஆயுதங்கள், பீரங்கிப் படகுகள், ரோந்துப் படகுகள் போன்றவற்றை வழங்கி அதனை உடனடியாக பலம்வாய்ந்த ஒரு கடற்படையாக அமைக்கவேண்டும் என அரசாங்கத்துக்கு அவசர வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டிருக்கிறது.**

கடற்புலிகளின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதன் காரணமாகவே இந்தத்திட்டம் தாமதமின்றி அமுல்செய் யப்படவேண்டுமெனவும் அரசின் கவனத்துக்கு கடற்படையின் உயரதிகாரிகள் மூலம்கொண்டு வரப்பட்டுள்ளது.

கடற்படையின் புதிய தளபதியாக கடந்த வருடம் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் மொஹான் சமரசேகராவின் பரிந்துரைக்கு அமையவே இந்தத் திட்டம் அரசுக்கு சமர்ப் பிக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மீனவர் சடலமாக மீட்பு

(எழுதுமட்டுவாள்) கிளாலி கடலில் கடந்த சனிக்கிழமை இரவு மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் கடலிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு பண்டிதரி குடியிருப்பை சேர்ந்த ச. உதயகுமார்

(4-ம் பக்கம் பார்க்க)

## லண்டனிலிருந்து திரும்பிய யாழ். வாசி கிளிநொச்சியில் நீரில் மூழ்கி மரணம்

(கிளிநொச்சி) லண்டனில் பல வருடங்கள் வாழ்ந்து, யாழ்ப்பாணம் செல்லுமுகமாகக் கிளிநொச்சி நகரில் தங்கிநின்ற சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர், கிளிநொச்சிக் குளத்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள் விஜயம்

(யாழ்ப்பாணம்) கொழும்பிலிருந்து யாழ். வந்துள்ள சிறுவர் பாது காப்பு நிதியத்தைச் சேர்ந்த உயர்மட்டப் பிரதிநிதிகள் நேற்றுக்காலை யாழ். பொது வைத்தியசாலையை சுற்றிப் பார்வையிட்டதுடன் வைத் தியசாலைப்பணிப்பாளர் உட் பட உயரதிகாரிகளைச் சந் தித்து உரையாடினர்.

விடுதிகள், விமானத்தாக்கு தலினால் இடிபாட்டுக்குள்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் பகுதியில் திட்டமிட்ட சிங்களகுடியேற்றம்

(திருமலை) திருகோணமலையில் தமிழர் கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசம் எங்கும் படிப் படியாகச் சிங்கள மயமாக்கும் நடவடிக்கை, சிறிலங்கா அர சால் திட்டமிட்டு மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும், இதன் பின்னணியில் பௌத்த பிக்குகள் தீவிரமாகச் செயற் பட்டு வருவதாகவும் அண் மைக்காலத் தகவல்கள் தெரி விக்கின்றன.

தமிழர்கள் வாழ்ந்தவந்த நிலங்கள் யாவும் சுவீகரிக்கப் படுவதாகவும், இவ்வாறு சுவீ

(4ம் பக்கம் பார்க்க)

## தீவிரமாகப் பரவிவரும் நெருப்புக் காய்ச்சல்

(யாழ்ப்பாணம்) யாழ்.மாவட்டத்தில் நெருப் புக் காய்ச்சல் வெகு தீவிர மாக பரவி வருவதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் நெருப்புக் காய்ச்சலினால் ஒரு மாதத்தில் சுமார் 60 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் ஆனால் இவ் ஆண்டில் ஒரு மாதத்

(4-ம் பக்கம் பார்க்க)

## நில்கிரியில் மண்ணெண்ணை வந்தது

(யாழ்ப்பாணம்) நில்கிரி கப்பல் நேற்று ஒரு தொகுதி மண்ணெண்ணை பரல்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந் தது. இந்த மண்ணெண்ணை பல நோக்கு கூட்டுறவுச்சங்கங் களூடாக விநியோகிக்கப் படும். (159-இ)

## இ. காங்கிரஸுக்கு எதிராக அர்ஜுன்சிங் போர்க்கொடி

(புதுடில்லி) இந்திரா காங்கிரஸ் கட்சி யின் தலைமைப்பதவியிலிருந்து பிரதமர் பி. வி. நரசிம்மராவ் விலகவேண்டுமென மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் மற்றும் அவரது ஆதரவாளர் கள் கோஷமெழுப்பியுள்ளனர். இந்திரா காங்கிரஸ் கட்சிக் குள் பெரியதொரு பூகம் பத்தை எழுப்பியிருக்கும் இந்த நிலையை சமாளிப்பதற் காக அர்ஜுன்சிங் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கு

(எழுதுமட்டுவாள்) நேற்று இரவு ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலி கடலை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது. சேதவிபரங்கள் எதுவும் உடனடியாகத் தெரிய வில்லை. (170 இ)

## வடக்கு கிழக்கு பிரச்னைக்கு நியாயமான தீர்வை தெரிவுக்குழு எடுக்கும்

— ஜனாதிபதி

(கொழும்பு) வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு நியாயமான தீர்வைக்காணுவ தற்கு நாடாளுமன்ற தெரிவுக் குழு நடவடிக்கை எடுத்துவரு கிறது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேம தாசா இவ்வாறு தெரிவித் தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இல. சமாதானத் தீர்வுக்கு முன்செல்வதாக தகவல்

(வாஷிங்டன்) இலங்கையின் இனப்பிரச்னை ஒரு சமாதானத் தீர்வை நோக்கி முன்செல்வதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத் திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் அரசியல் மற்றும் இராணுவ நிலைமை பற்றி ஆய்வு செய்தபின் எழு திய கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ)

## பம்பாய் குண்டுவெடிப்புக்கு பாகிஸ்தானே பொறுப்பு

- பொலிஸ் அதிகாரி தகவல்

(புதுடில்லி) பம்பாயில் அண்மையில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு பாகிஸ் தானே பொறுப்பு என பம் பாய் உயர் பொலிஸ் அதி காரி ஒருவர் நேற்று கூறினார்.

இக்குண்டு வெடிப்புச்சம்ப வங்களுக்கு பாகிஸ்தான் முழுப்பொறுப்பாகும். எத்த எந்த இடங்களில் குண்டுகளை வெடிக்க வைக்க வேண்டும் என்ற திட்டம் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டதாகவும், குண்டுகளை எப்படி வெடிக்க வைக்கவேண்டும் என்று சதி காரர்களுக்கு பாகிஸ்தானில்

(4ம் பக்கம் பார்க்க)

### பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 6 பேர் பலி; 10 பேர் காயம்

(கராச்சி) பாகிஸ்தானில் நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் 6 பேர் கொல் லப்பட்டதுடன், 10 பேர் படு காயம் அடைந்தனர்.

பாகிஸ்தானில் நேற்று முன் தினம் அதிகாலை நிகழ்ந்த இக்குண்டு வெடிப்பில், பல

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### FOLLOW ME

ரெலிவிசன், வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கில பாட நிகழ்ச்சி தொடர்புத்தகம் வெளிவந்து விற்பனையாகின்றது பாலாஜி புத்தகசாலை 16, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (எ-2956)

### சேவை

ஸ்ரீ காந்தா அச்சகம் ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால் உங்கள் அவசர தேவைகள் எதுவானாலும் அழகுற செய்து கொள்வதற்கு நாடுங்கள். ஸ்ரீகாந்தா அச்சகம் லேன்-யாழ்ப்பாணம். (எ-2965)

### மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சு யந்திரசாலை; கொக்குவில். (எ-2955)


# செய்திச்சிதறல்

## பெப்ரவரி மாத ஒய்வூதியம்

(மானிப்பாய்)

யாழ். அரச அதிபரின் முயற்சியினால் புகையிரத திணைக்கள ஊழியர்களின் பெப்ரவரி மாதத்திற்குரிய ஒய்வூதிய வவச்சர்களும் காசோலைகளும் ஒய்வூதியக் கணக்காளரினால் எடுத்துவரப்பட்டு யாழ். செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (71)

## அன்பளிப்பு

(நெல்லியடி)

மந்திகை அரசினர் மருத்துவமனையின் புனர்வாழ்வுப் பிரிவு நோயாளரின் நன்மை கருதி சுமார் 500/- ரூபா பெறுமதியான உபகரணம் ஒன்றை பிரெஞ் வைத்தியக் குழுவில் முன்பு கடமையாற்றிய வைத்திய நிபுணர் திரு. வைக்கல் அன்பளிப்பாக கொடுத்து உதவியுள்ளார். (160)

## பிரிவுபசாரம்

(எழுதுமட்டுவாள்)

கொடிகாமத்திலுள்ள தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தில் பொதுமுகாமையாளராக 33 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி ஒய்வு பெற்ற திரு எஸ் கைலாச பிள்ளைக்கு அண்மையில் சங்கத்தில் பிரிவுபசாரம் நடைபெற்றது. (170)

## புனித சூசையப்பர் திருவிழா

(அரியாலை)

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 19ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காலையில் நடைபெற்ற புனித சூசையப்பரின் திருச்சொரூப பவனியில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். (59)

## லக்ஸ்பிறே விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தினர் 5வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 1 பைக்கற் லக்ஸ்பிறே பால்மா 55 ரூபா வீதம் தற்போது வழங்கிவருகின்றனர். (71)

## விசேட விசாரணைகள்

(எழுதுமட்டுவாள்)

சாவகச்சேரி தமிழீழ காவல்துறைப் பணிமனையில் சில மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட விசேட விசாரணைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. (170)

## தேங்காய் எண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு 400 மில்லி லீற்றர் வீதம் தேங்காய் எண்ணையை சங்க கிளைகள் ஊடாக விநியோகித்துவருகின்றது. (72)

## தடுப்பு ஊசி மருந்து விநியோகம்

(நெல்லியடி)

விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து ஏற்புவலி தடுப்புஊசி மருந்துகள் போன்றவையும், ஒரு தொகுதி எக்ஸ்றே கதிர் பிலிம்களும் மந்திகை ஆஸ்பத்திரிக்கு வந்துசேர்ந்துள்ளன. (160)

## புளியின் விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் இம்முறை புளி நன்கு காய்த்துள்ளது. கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் நகரில் வசிப்பவர்கள் தமது வீடுகளுக்கு சென்று புளியம்பழங்களை பறித்துவந்து தட்டுப்புளி செய்து விற்பனை காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் புளியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

## சுயதொழில் முயற்சி

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், அங்கவீனர்கள் ஆகியோருக்கு ஆடு வளர்த்தல், சைக்கிள் திருத்துதல், தையல்வேலை செய்தல் ஆகிய சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஒவ்வொருவருக்கும் ரூபா இரண்டாயிரத்தைந்நூறு வழங்கப்பட்டு தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சமூக சேவை திணைக்களம் வடமராட்சி கிழக்கில் நான்கு பேருக்கு இவ்வுதவிப் பணத்தை வழங்கியுள்ளது. (1.3)

## குருபூசை தினம்

(கொழும்புத்துறை)

நல்லைக்குருமணி மணிஐயர் அவர்களின் குருபூசை தினம் இம்மாதம் 31ம் திகதி புதன்கிழமை காலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும். (124)

## பொது அறிவுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ் மத்திய கல்லூரிக்கும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரிகளுக்குமிடையிலான பொது அறிவுப்போட்டி ஒன்று நாளை 24ம் திகதி புதன்கிழமை அதிபர் சு. சண்முகநாதபிள்ளை தலைமையில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (154)

## மருத்துவமனை பெயர் மாற்றம்

(புலோலி)

கரவெட்டி அம்பம் மகப்பேற்று மருத்துவமனையின் பெயரை சின்னத்தம்பி ஞாபகார்த்த மகப்பேற்று மருத்துவமனை என பெயர் மாற்ற சுகாதாரத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (61)

## நியாயவிலைக் கடை

(தாளையடி)

பங்கீட்டு அடிப்படையில் நியாயவிலையில் உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்குவதற்காக நியாயவிலைக் கடையொன்று அண்மையில் நாகர்கோவில் வடக்கு கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் வட்டப்பொறுப்பாளர் திரு. சீர்மாறன் இக்கடையினை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (163)

## அமைதிவேண்டிப் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

நாட்டில் அமைதி சமாதானம், சுபீட்சம் நிலவ இறையாசிவேண்டிப் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலையில் தொண்டைமானாறு ... (continued) கொக்குவில் தொகுதி: வெள்ளிக்கிழமைகளில் மாலையில் தொகுதி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் பஜனை கூட்டுப்பிரார்த்தனைகள் இடம்பெற்றுவருகிறது. (154)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் அமரர் கே. டானியலுக்கு நினைவஞ்சலி கூட்டமொன்றை இன்று 23-ம் திகதி நடாத்துகின்றது.

கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 4.15 மணிக்கு செல்வி சு. மாதவி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது (வி)

## புதிய தேர் வெள்ளோட்டம்

(கொழும்புத்துறை)

நல்லூர் பரணன் குளம் அருள்மிகு ஸ்ரீ நாச்சியம்மன் கோவிலுக்கென புதிய தேர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய தேர் அடுத்த மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு வெள்ளோட்டம் விடப்படுமென்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ச விஜயரத்தினம் தெரிவித்தார்.

மறுநாள் 6ஆம் திகதி ரதோற்சவத்திலன்று அம்பாள் புதிய தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (154)

## கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

விறகினை சிக்கனமாக பயன்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினரால் சிறந்த தொழில் நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட உச்ச பயனை பெறக்கூடியதாக இரட்டைச் சூட்டடுப்பு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அடுப்பின் பயன்பாடு பற்றியும், பாவனைமுறை பற்றியும் பாடசாலைகள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. யாழ் மாவட்டத்தில் நடைபெறும் கிராமிய உற்பத்திக் குழுக்களின் கூட்டங்களிலும் சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கப் பணிமனைகள் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும் இது தொடர்பான விளக்கவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# பாகிஸ்தான் குண்டுவெடிப்பு ஆறுபேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெட்டாவில் என்னுமிடத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடித்த இடத்திற்கு அருகாமையில் இருந்த பெரும் கட்டிடம் ஒன்று பாரிய சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவில் நேற்று உத்தரப்பிரதேசத்திலும் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டு மூவர் படுகாயமடைந்தனர். தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்தொண்டர்கள் வீடொன்றில் குண்டு தயாரித்துக் கொண்டு இருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. மேலும் அந்த வீட்டிலிருந்து வெடிபொருட்களையும் வெடிகுண்டுகள் சிலவற்றையும் பொலிசார் கைப்பற்றினர் (கே-சி)

# பருத்தித்துறை நகரசபையின் நடமாடும் அலுவலகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை நடமாடும் அலுவலகத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந் நடமாடும் அலுவலகம் அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களின் அனுசரணையுடனேயே நடாத்தப்படவுள்ளது. இந்நடமாடும் அலுவலகத்தின் போது நகரசபைச் செயலாளர் திரு க. சண்முகநாதன் தலைமையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர், சனசமூக நிலையங்களின் நடவடிக்கைகள் லிகிதர், பிரதம லிகிதர் உட்பட இன்னும் உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருப்பார்கள்

இந்நடமாடும் அலுவலகத்தின் போது வரியிறுப்பாளர்களின் குறைபாடுகள், தேவைகள் பற்றி ஆராயப்பட்டு அவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரியிறுப்பாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

இந் நடமாடும் அலுவலகம் இம்மாத இறுதியிலிருந்து செயற்படத்தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## நீரிறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(எழுதுமட்டுவாழ்)

பளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அண்மையில் பளை அரசினர் வைத்தியசாலைக்கு ஓர் நீர் இறைக்கும் இயந்திரத்தையும் 15,000/- ரூபா பெறுமதியான தளபாடங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். அத்தோடு நோயாளர் தங்குவதற்கான கொட்டகை ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளனர். (170)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை றோ. க. பாடசாலையில் உதவி ஆசிரியராகக்கடமையாற்றிவந்த ஆசிரியர்ஜி வி ராதாகிருஷ்ணன் மேற்படி பாடசாலையில் பிரதி அதிபராக சென்ற மாதம் முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அதிபர் தரம் IIக்கு கல்வி அமைச்சினால் நியமனம்பெற்ற இவர் ஒரு பயிற்றப்பட்ட விஞ்ஞானப் பட்டதாரியாவார். (இ)

## இலவச பரிசோதனை

(கொழும்புத்துறை)

புற்றுநோய் தடுப்புச் சம்பந்தமான விரிவான இலவச பரிசோதனையும் பல ஆலோசனைகளும் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தினால் வழங்கப்பட்டுவருகின்றன.

பிரதி, செவ்வாய் வியாழன் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வைத்திய நிபுணரினால் வாய் பரிசோதனை செய்யப்பட்டுவருகின்றன.

பிரதி திங்கள், புதன்கிழமைகளில் பெண்களுக்கான மார்பு நோய்ப் பரிசோதனையும் செய்யப்பட்டு வருவதாக யாழ். புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (154)

## ஆயுர்வேத மருந்து கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சுமார் 15,000 ரூபாவுக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இலங்கை ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட மருந்துவகைகளும் இவ் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை இல்ல உடலாளர்கள் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ். கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் இ. வேலாயுதமும், சிறப்பு விருந்தினர்களாக திரு. க. இளங்குமரன் (கல்விக்கழகப் பொறுப்பாளர்) நல்லூர் கோட்டத்தணி அதிபர் மு. இராமலிங்கமும் கலந்து கொள்கின்றார்கள்.

## பலிக்களம்

(அரியாலை)

உலக இரட்சகர் யேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் 'பலிக்களம்' எனும் நாடக இசை உரைச் சித்திரம் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 4ம் திகதி வரை யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (59)

## திருவிழா

(அரியாலை)

வல்-வடமேற்கு நாலுகால் மடம் மருதடி ஞானவைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு அலங்காரத் திருவிழா ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் வரை நடைபெறும் இவ்விழாவில் பல சைவப்பெரியார்கள் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்கள் எனத்தெரிய வருகிறது. (59)

யாழ்ப்பாணம்



# 188 இந்துக் கோவில்கள் மட்டு மாவட்டத்தில் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலவன்செயலினால் 188 இந்து ஆலயங்கள் பலத்த சேதமடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றை திருத்தியமைப்பதற்கு 2 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது என இந்துகலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் தற்போதும் ஆலயங்களில் படை முகாம்கள் இருந்து வருகின்றன. இவற்றை மூடி வழிபாட்டிற்காக ஆலயங்களை திறந்துவிடுமாறு பல தடவைகள் கோரப்பட்டுள்ளபோதும் அரசு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# ரூ. 10 லட்சம் பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வருகின்றன

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டு மாணவர்களுக்கென யாழ். கல்வித் திணைக்களத்தால் கொழும்பில் செய்து எடுத்து வரப்பட உள்ள தளபாடங்கள் இதுவரை வந்து சேராததால் அவற்றை உடனடியாக எடுத்துவர யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்பு செல்ல உள்ளார்.

இவ் அதிகாரி படைத்தலைமை செயலக அனுமதிபெற்று உடனடியாக இவற்றை கப்பல் மூலம் எடுத்து வருவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை 10 லட்ச ரூபாய் பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளும் எடுத்து வரப்படவுள்ளன.

இவை எடுத்து வரப்பட்ட பின்னர் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-சி)

# வலிமைதான் வாழ்வு பலவீனமே மரணம்

## — சுவாமி சித்ரூபானந்தா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர், இந்துமத வளர்ச்சிக்கு பாடுபட்டது போன்று நம்மிடையே வாழ்ந்த இந்துமத துறவிகளுள் சுவாமி முதன்மை பெறுகிறார். மிகப்பெரிய உண்மை இது. வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம். இன்று நம்மிடையே கடவுள் வழிபாடு, சமயத்தின் ஆற்றலை நம்பிக்கை இல்லாவிட்டது நாம் காண இருப்பது மிருகத் தன்மையே.

இவ்வாறு சுவாமி சித்ரூபானந்தா கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் நடைபெற்ற இந்து மாணவர்மன்ற நிறைவு விழாவில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:

மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில்தான் அடங்கியிருக்கிறது. என்றைக்கு ஆன்மீகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்த சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்து விடுகிறது.

மனிதனுக்குள் ஏற்கெனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியாகும். முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்துசேரும். துறவும் தொண்டுமே எமது இலட்சியங்களாக இருக்க வேண்டும் என்றார். சுவாமி விவேகானந்தர் இக்கரோவில் சிங்கநாதம் செய்த துறவி விவேகானந்தர் நமக்குக் காட்டியுள்ள பாதை நமது எழுச்சிக்கும் உயர்வுக்கும் வழிகோலும். இதில் ஐயமில்லை. (சு-சி)

# ஐ.தே.கவிற்கான வாக்குகள் எனக்கு போடும் வாக்குகள்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போடும் ஒவ்வொரு வாக்குகளும் எனக்குப் போடும் வாக்குகளாகும்.

இவ்வாறு தனது அரசியல் வாழ்வின் 43வது நிறைவுவிழாவில் பேசிய ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்:

நான் காந்தியின் கொள்கைகளையும் குணதிசயங்களையும், போதனைகளையும் பின்பற்றி நடக்கிறேன். அதனால்தான் இவ்வளவு காலமாக நேர்மையான முறையில் ஆட்சி செலுத்தி வருகிறேன் என்றார். (59-சி)

# வெளிநாட்டவர்க்கு விஸா வழங்க பங்களாதேஷ் அரசு மறுப்பு

(டாக்கா)

இந்தியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளையடுத்து பங்களாதேஷ் வெளிநாட்டவர்களுக்கு விஸா வழங்குவதை நிறுத்தியுள்ளது.

குறிப்பாக தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்தத்தடை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விஸா வழங்கல் தடை கடந்த இரு நாட்களுக்கு முன்பே அமுலுக்கு வந்துள்ளது.

கல்கத்தாவிற்கு மிகஅருகில் பங்களாதேஷ் இருப்பதால் பங்களாதேஷ் தலைநகர் டாக்கா விமான நிலையம் பலத்த பாதுகாப்புடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# பரீட்சை திகதி மாற்ற அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவிருந்த கீழ்க்காணும் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எஸ். எல். ஏ எஸ். இலங்கை (நிர்வாக சேவை)(திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சை கொழும்பில் மே மாதத்திலிருந்து ஜூன் மாத முற்பகுதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. எஸ் எல். ஓ. எஸ். தரம் II/ கொழும்பில் ஜூன் மாத முற்பகுதியில் நடைபெறும்.

தொழில்நுட்பக் கல்வி ஆசிரியர் பரீட்சை (பகுதி 1) ஏப்பிரல் 26, 27ம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் 10 நிலையங்களில் நடைபெறும்.

எஸ். எல். ஏ. எஸ். இலங்கை நிர்வாகசேவை) தடைதாண்டிப் பரீட்சை கொழும்பில் மே மாதம் 29ம் திகதி நடைபெறும்.

ஏ. ஏ.ரி. ஸ்ரீலங்கா பரீட்சை கொழும்பில் மார்ச் மாதம் 20, 21, 27 ஆகிய திகதிகளில் நடைபெறும். (வி)

# பண்டிதர் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் ஆகிய வகுப்புக்கள் வெள்ளிக்கிழமைகளில் தென்மராட்சிக் கல்விக்கோட்டத்தினால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாலைவேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி வகுப்புக்களில் சேர்ந்து கற்க விரும்புபவர்கள் 25ம் திகதிக்கு முன்பு கோட்டத்திற்கு நேரில் வந்து தம்மை பதிவு செய்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. வீரபத்திரன் கேட்டுக்கொள்கின்றார்.

# தமிழ் தம்பதிகளிடம் நகைகள் கொள்ளை

(கொழும்பு)

வெள்ளவத்தையில் தமிழ் தம்பதியினரிடமிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிறு ஆயுதம் தாங்கிய துப்பாக்கி நபர்கள் இத் துணிகர கொள்ளையை நடாத்திவிட்டு தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிசாரிடம் புகார்செய்துள்ளதையடுத்து பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனராம். (ச)

# கடும் பாதிப்புற்றோருக்கு கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலேற்பட்ட வன்செயல்களால் கடும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், உயிரிழப்புக்கள் ஏற்பட்ட குடும்பங்களுக்குமான கொடுப்பனவுகள் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கெனத் தயார் செய்யப்பட்ட கொடுப்பனவுப் பத்திரத்தில் (வவுச்சர்) ஒப்பமிட்டவர்களுக்கே முதலில் இது வழங்கப்படவிருக்கிறது.

1993 ஏப்ரல் மாதம் தொடக்கம், மாகாணசபைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அவை வரும் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதால், சரியாகப் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்குரிய துரித நடவடிக்கைகளை அவர்கள்மேற்கொண்டுள்ளார்கள்.

1993 ஏப்ரல் மாதத்தின் பின்னர் இவ்வாறான கொடுப்பனவுகள் யாவும் அந்தந்தப் பிரதேசச் செயலகங்கள் மூலமாகவே நடைபெறும் என்று செயலக வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (161-சி)

## தவக்கால நற்சிந்தனை

"தூயதோர் உள்ளத்தை இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்" (சங் 50:10 அ) இறைவன் தூய்மையுள்ளவர். அவர் மக்களாகிய எம்மிடம் அவர் வேண்டுவதும் தூய்மையையே. நாம் அவர் விரும்பும் தூய்மை நெஞ்சினர்களாய் வாழ அவர்பால் வேண்டவேண்டும். உறுதி தரும் ஆவியை எம்மில் மலரச் செய்யவேண்டும். அப்போதுதான் அவர் மீட்பால் வரும் மகிழ்ச்சியில் நாம் பங்குகொள்ள முடியும்.

மோ. தா.

# இராசி பலன்

23-03-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு பங்குனி 10)

அமாவாசை பி. ப. 1-27 வரை உத்தரட்டாதி பி. இ. 4-37 வரை இராகுகாலம் மாலை 3-17 முதல் 4-47 வரை சுபநேரம் காலை 10-47 முதல் 12-17 வரை

மேடம்: ஜனதுவேசம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, மனக்கவலை.

இடபம்: தானதருமம். சதுரியம், பணவரவு

மிதுனம்: காரிய அனுகூலம் மரியாதை, நண்பருதவி.

கடகம்: மனசங்கடம், காரியதடை, தொழில் சிரமம்

சிங்கம்: இடபேதவாதம் விஷப்பிணி, அமைதிக்குறைவு

கன்னி: வருமான அதிகரிப்பு குடும்ப இறப்பு, தொழில் விருத்தி.

துலாம்: பிறர்பாராட்டு, வசீகரம், தொழில் லாபம்,

விருச்சிகம்: சத்துருபயம், மனைவியால் துயர் வெறுப்பு.

தனுசு: அபாயமான தொல்லை, மனக்குறை யோசனை.

மகரம்: வாக்குவன்மை சமரச முயற்சி, சுபசோபனம்.

கும்பம்: வித்தியாபங்கம், குடும்பதுயர், தனிமைப்படல்.

மீனம்: புதியவர் நட்பு, கற்பனை, தெய்வபக்தி.

ஜோஸ்யர்

# யாழ். மாநகர நூலகத்திற்கு கப்பல் மூலம் புத்தகங்கள் கொண்டுவர ஏற்பாடு

(திருநெல்வேலி)

யாழ். மாநகரசபையின் நூலகத்திற்கு ஒருதொகை நூல்கள் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன. மற்றொரு தொகுதி நூல்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளதாகவும் மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய மாநகர ஆணையாளர் நூலகத்திற்கான நூல்களை எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளை செய்து வந்துள்ளார்.

மிகுதி நூல்கள் தொகுதியும் விரைவில் வந்து சேரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-சி)

# தாண்டிக்குளம் ஊடாக நகைகள் கொண்டுவர அனுமதி மறுப்பு

(பண்டத்தரிப்பு)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாமில் கொழும்பிலிருந்து வருபவர்கள் மேலதிகமாக நகைகள் கொண்டுவருவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட பவுண் நிறைக்கு மேல் நகைகளை கொண்டுவரவேண்டாம் என்று இத்தடை முகாமில் அடிக்கடி தமிழ்மொழியில் ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்படுவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் வாலிபர் ஒருவர் தமது கழுத்தில் அணிந்துகொண்டு வந்த தங்கச் சங்கிலியை கொண்டுவர அனுமதி மறுத்த இராணுவத்தினர் அதனை வவுனியா நகரத்திற்கு கொண்டு சென்று விற்றுவிட்டு வருமாறு கூறியதாகவும் வேறுவழியின்றி அந்த வாலிபர் தமது சங்கிலியை வவுனியா நகருக்கு கொண்டுசென்று விற்றுவிட்டு வந்தபின்னர் தடைமுகாமில் அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72-சி)

## மீளாய்வு

(தாளையடி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் விபரங்கள் அஞ்சல் அலுவலகங்கள் ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டுவருகிறது. (163)

## ஜெயலலிதா விவகாரம்:

# தேர்தல் கமிஷனுக்கு மனுவை அனுப்பகோரிக்கை

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராகத் தமிழக ஆளுநரிடம் சமர்ப்பித்த மனுவை, தேர்தல் கமிஷனுக்கு அனுப்பும்படி உத்தரவிடுமாறு ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சென்னை உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

நேற்று நீதிபதி ஜே. எஸ். வர்மா, என். கே. சிங் ஆகியோரைக் கொண்ட நீதிமன்றத்தில், இம்மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சமர்ப்பித்த மனுவில் ஆளுநர் பீஷ்மர் நாராயண் சிங்கிற்கு உயர் நீதிமன்றம் கட்டளை மனு அனுப்பவேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைப் பங்குதாரராகக் கொண்ட ஒரு நிறுவனம், மாநில அரசின் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திருப்பது சட்டப்படி குற்றம் என்றும், எனவே ஜெயலலிதா சட்ட மன்ற உறுப்பினர் பதவியைத் தொடர்வதற்குத் தகுதியற்றவர் என்று நீதிமன்றம் அறிவிக்கவேண்டும் என்றும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மனுவில் குறிப்பிட்டிருந்தார். (க-இ)

### பம்பாய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து பயிற்சியும் அளிக்கப்பட்டதாகவும், குண்டு வெடிப்பு சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டவர்களின் வாக்குமூலத்திலிருந்து இவை தற்போது தெரியவந்துள்ளதாக அந்த பொலிஸ் அதிகாரி மேலும் கூறினார். (வி)


VACANCY

SALES REPRESENTATIVES

Tasty Invites young Dynamic Self motivated persons to Join our Marketing team

Candidates Should Possess a Good Educational background and have Excellent Communication and Inter personnel Skills.

The Post entails long hours of work and only those willing to do hard. work and grow with the Organisation need Apply.

Remuneration would be linked to performance. and would include a package of benefits to right Candidate.

Apply with Details before 29th March 1993.

MANAGER ADMINISTRATION

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

A-2978


# கண்ணீர் அஞ்சலி

## பேராசிரியர்
## வன்னியசேகரம் கருணைநாதன்

பேராசிரியர் வன்னியசேகரம் கருணைநாதன் மறைந்துவிட்டார். அவர் இவ்வைத்தியசாலையில் பத்து வருட காலமாக சத்திரசிகிச்சை நிபுணராக ஆற்றிய பணி அளப்பரியது. அவரது மறைவு இவ் வைத்தியசாலைக்கும், மருத்துவபீடத்திற்கும் இப்பகுதி மக்களுக்கும் பேரிழப்பாகும். அவரது "ஆன்மா" சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
பணிப்பாளர், வைத்தியர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்,
21-03-93.

(ஏ-2977

## ஓய்வூதியக் பணிக்கொடை

(மானிப்பாய்)

யாழ். செயலக ஓய்வூதிய கணிப்புப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட முதலாவது ஓய்வூதிய பணிக்கொடையை யாழ். செயலகத்தில் மாகாண சபையின் கணக்காளராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. வி. எஸ். கனகரத்தினம் பெற்றுக்கொண்டார்.

ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான இப்பணிக்கொடையை யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் கடந்த 19-ந் திகதி வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக கையளித்தார். (71-கி)

# தமிழக சட்டமன்றத்திலிருந்து இந்திரா காங்கிரஸ் வெளிநடப்பு

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சரின் வரவு-செலவுத்திட்ட பதிலுரையை இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்து நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மாநில அரசின் நிதிநிலை அறிக்கை மீது உரையாற்ற தமக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை பேரவைத்தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா நிராகரித்தார்.

நிதியமைச்சர் உரையைத் தமது கட்சி நிராகரித்ததென்று திரு. பாலசுப்பிரமணியம் அறிவித்து நேற்று வெளிநடப்புச் செய்தார்.

இதனையடுத்து, அவருடன் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

அ. தி. மு. க. அரசு காங்கிரஸுடனான தனது உறவை முறித்துக்கொண்டதை அடுத்து, மாநில சட்டப்பேரவையில் கூச்சல், குழப்பம் நிகழ்வதும், பகிஷ்கரிப்பு நடைபெறுவதும் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதும் தெரிந்ததே. (கே-கி)

### பாகிஸ்தானில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளதாகவும், இக்கட்டடத்திற்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரு வாகனங்களும் முற்றாகச் சிதைந்து போனதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

### திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பறிக்கப்படும் நிலங்களுக்கான உறுதிகள், சிறிலங்கா காணி அமைச்சினால் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக 'லவ் லேன்' என்ற பகுதியில் வாழ்ந்து வந்த தமிழர்கள், அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குடியமர்த்தப்படுவோருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

### இ. காங்கிரஸுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் விதமாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டக்குழு நேற்று அவசர கூட்டம் ஒன்றை புதுடில்லியில் நடத்தியது.

இவ்வார இறுதியில் காங்கிரஸ் கட்சியின் மாநாடு புதுடில்லியில் நடைபெற இருப்பதனால் அதற்கு முன் கட்சிக்குள் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காகவே மத்திய குழுவின் கூட்டம் கூட்டப்பட்டுவதாக கட்சியின் பொதுச்செயலர் கூறினார்.

இதேநேரம், தனது தொலைபேசியை ஒட்டுக்கேட்டதாக அமைச்சர் அர்ஜுன்சிங் கூறிய குற்றச்சாட்டை மத்திய அரசு மறுத்துள்ளது. (வி-இ)

# பிரெஞ்சு தேர்தலில் மித்தரோங் கட்சி தோல்வியடையும்?

(பாரிஸ்)

பிரான்ஸில் தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி பிராங்கோஸ் மித்திரோங்கின் சோஷலிசக் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது.

577 தொகுதிகளைக் கொண்ட பிரான்ஸின் நாடாளுமன்றத் தேர்தலில் தற்போது 56 தொகுதிகளுக்கு மட்டுமே வாக்கெடுப்பு நடைபெற்று வருகின்றது.

முதல் சுற்றில் இதுவரை வெளியான 80 முடிவுகளில் ஜனாதிபதியின் கட்சிக்கு எந்த ஒரு தொகுதியிலும் வெற்றி கிடைக்கவில்லையென்றும் வலதுசாரிக் கூட்டணிக்கட்சியினரே அனைத்துத்தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### தீவிரமாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் 110 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மற்றும் போஷாக்கின்மையே இந்நோய் அதிகரிப்பிற்கு பிரதான காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### மட்டு. மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாதது, மற்றும் தளபாடப் பற்றாக்குறை, இடநெருக்கடி போன்ற குறைபாடுகள் பற்றி அரசுக்கு பல தடவை எடுத்துக் கூறியும் அரசு செவிமடுக்காததை கண்டித்தே ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக கோஷங்களும் எழுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-கி)

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டி. எஸ். சேனநாயக்காவின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்குமுன் சகல இன மக்கள் பிரதிநிதிகள் சமர்ப்பித்த ஆலோசனைகளையும் அரசு கவனத்தில் கொள்ளும் என்றார். (க)

### மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 18) என்ற மீனவர் கிளாலி கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றதாக தெரியவருகிறது.

இவர் சடலமாக சேற்பலி கடல் கரையிலிருந்து நேற்று காலை 10-00 மணியளவில் மீட்கப்பட்டார்.

இவருடன் சென்ற பண்டிதர் குடியிருப்பை சேர்ந்த க. குணசீலன் (வயது 22) செ. சந்திரலிங்கம் (வயது 45) ஆகியோரது விபரங்கள் பற்றி தெரியவில்லையெனவும் கூறப்படுகிறது. (170-இ)

### கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் குதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகளை அரசு மேலும் அலட்சியப்படுத்துமானால் தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுழற்சி முயற்சியில் 24 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

இதனை ஆரம்பிப்பதற்கு முன் இந்த மாணவர்கள் களனியிலிருந்து சுதேச மருத்துவகல்லூரி அமைந்துள்ள ராஜகிரிய வரையில் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றையும் நடத்தினர். (இ)

### யாழ். ஆஸ்பத்திரிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளான கட்டிடங்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

சிறுவர் பாதுகாப்பு உயர் மட்டப்பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் யாழ். குடாப்பகுதியில் அனேகமான குழந்தைகள் நோய்வாய்ப்படும் போஷாக்கின்மையாலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு போதியளவு மருந்து மற்றும் சுகாதார வசதிகள் இல்லாததே இதற்குக் காரணமென்றும் தெரிவித்தனர்.

இதனை நேரில் பார்வையிட்ட பின்னரே உண்மை நிலை தெரிகிறது என்று தெரிவித்த அவர்கள் தாங்கள் கொழும்பு சென்றதும் இது சம்பந்தமாக எடுத்துரைப்பதாகவும் தெரிவித்தனர். (56 - இ)

### கடற்படையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையின் தேவைக்காக தற்போது உள்ளூரில் தயாரிக்கப்படும் ஒரு சில தளபாடங்கள் கட்டாயமாக வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படவேண்டுமெனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சக்தி வாய்ந்ததும் அதே நேரம் நவீன ரகத்திலுள்ள இந்த உபகரணங்கள் வெளிநாடுகளிலேயே தனித்துவமான முறையில் தயாரிக்கப்படுவதால் அவை அவசியம் இறக்குமதி செய்யப்படவேண்டும் எனவும் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நவீனமயமாக்கும் திட்டத்துக்கு பல கோடிரூபா செலவாகும்எனவும், எனினும் கடற்புலிகளை சமாளிக்க இத்தளபாடங்கள் அவசியம் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### லண்டனிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இல் நீராடியபோது சுழியில் அகப்பட்டு நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 20ம் திகதி காலை இடம்பெற்றது. இவரிடமிருந்த சில தஸ்தாவேஜுகள் மூலம் மரணமானவர் உடுவில் கிழக்கு, சுன்னாகம், அறிவகம் வாசியான எஸ். சிவபாலலிங்கம் அல்லது எஸ். குணஜீவன் என அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகக் கிளிநொச்சி காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மரணம் தொடர்பான மரண விசாரணையைக் கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. வி. கே திருலோகமூர்த்தி கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் மேற்கொண்டார்.

சாட்சிகளைக் கிளிநொச்சி நகர் கிராம சேவையாளர் ஞா செல்வரத்தினம் நெறிப்படுத்தினார். இறந்தவரின் சடலத்தை உடுவிலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (83-இ)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் பத்திரிகைப் பதிப்பகத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10336/B